21st March 1959]

SRI S. LAZAR : அரிசி விலை உயர்ந்து கொண்டு போவதைத் தடுக்க பேர் ப்ரைஸ் ஷாப்புகளை ஏற்படுத்தி இருப்பது போன்று, இப்பொழுது பருப்பு வகையருக்களும் விலை உயர்ந்து கொண்டு போகிறது, ஆறு அணா அல்லது எட்டணா வரையில் உயர்ந்து கொண்டு போகிறது, அதைத் தடுப்பதற்கும் பேர் ப்ரைஸ் ஷாப்புகள் வைத்துக் கொடுக்க இந்த அரசாங்கம் யோசனை செய்து வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அரிசியைப் போல் பருப்புகள் அவ்வளவு தேவை இல்லை. பருப்புகளைப் போலவே மற்ற தானியங்களும் விலை உயர்வாகத்தான் விற்கப்படுகிறது. ஆகவே எல்லாவற்றையும் பேர் ப்ரைஸ் ஷாப்புகளில் வைத்து விற்பது என்பது சரியல்ல.

Appointment of teachers through Employment Exchange

* 936-E Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is any proposal to appoint teachers through Employment Exchange?

THE HON. SRI C. SUBRAMANIAM : There is no proposal to appoint teachers through Employment Exchange so far as appointment of teachers in schools under private management is concerned. As regards teachers in schools under local bodies, there are already instructions that the Employment Exchange should be consulted before making appointment to all posts in superior service including those of school teachers.

SRI K. PERIANNAN : ஓராசியர் பள்ளிகளில் பெரும்பாலும் செகண்டரி க்ரேட் ஆசிரியர்களை நியமித்திருக்கிறார்கள். அவர்களை ரெகுலர் பள்ளிகளுக்கு மாற்றாமல் இருப்பதற்கு ஆட்சேபணை இருப்பதால் அவர்களை ரெகுலர் பள்ளிகளுக்கு மாற்றுவதற்கு அரசாங்கம் யோசிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன் ?

MR. SPEAKER : இப்பொழுது கேட்கப்பட்டிருக்கிற கேள்வி வேலை நிர்ணயிப்பது பற்றி. மாற்றுவதைப்பற்றி வேறு கேள்வி கேட்க வேண்டும்.

Single-teacher schools in Tirunelveli District

* 936-F Q.—SRI M. K. SOMASUNDARAM (on behalf of SRI K. SATTANATHA KARAYALAR) : Will the Hon. the Minister for Finance be pleased to state the number of single-teacher schools in the Tirunelveli district and the number of students studying in them?

THE HON. SRI C. SUBRAMANIAM : Number of single-teacher schools—190.

Number of students studying in them—7,706.

SRI M. K. SOMASUNDARAM : திருநெல்வேலி ஜில்லா போர்டு ஸ்பெஷல் ஆபீசர் அவர்களுக்கு சர்க்காரிலிருந்து ஓராசியர் பள்ளிகளை துவக்கக் கூடாது என்று தாக்கீது வந்திருப்பதாகச் சொல்லுகிறார், அப்படி அனுப்பப்பட்டிருக்கிறதா ? அப்படி அனுப்பப்பட்டிருந்தால் அதற்கு காரணம் என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதற்கு நோட்டீஸ் வேண்டும்.